தேசிய சங்கநாதம்

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு



வாழ்க்கைச் சுருக்கம்

245
515/95
V2:5147m87
N88
194146

தேசிய சங்கநாதம்

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

வாழ்க்கைச் சுருக்கம்

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சேலம் மாவட்டத்தில் இராசிபுரத்தில் 4.6.1887-இல் வரதராஜுலு நாயுடு பிறந்தார். தந்தை பெயர் பெருமாள் நாயுடு, தாயார் பெயர் குப்பம்மாள்.

எளிய குடும்பத்தில் பிறந்த வரதராஜுலு நாயுடு எட்டாம் வயதில் தந்தையையும், பன்னிரண்டாம் வயதில் தாயாரையும் இழந்தார். கோயம்புத்தூரில் தாயாரின் சகோதரி வீட்டில் பெற்ற ஆதரவினால் கல்வி கற்றார். உயர்நிலைக் கல்வி கற்கும் பொழுதே நாடெங்கும் பரவிய வந்தே மாதர இயக்கம் இவரைக் கவர்ந்தது. 1906-இல் வங்கப் பிரிவினை இயக்கத்தைத் தொடர்ந்து ''வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்'' என்னும் தேசிய முழக்கத்தோடு மக்கள் இயக்கமாகப் பரவிய வந்தே மாதர இயக்கத்தில் இணைந்தார் இளைஞரான வரதராஜுலு. 'முற்போக்காளர் சங்கம்' என்னும் ஓர் அமைப்பை மாணவர்களிடையே அமைத்தார். அந்நியத் துணி விலக்கு, சுதேசியம் என்னும் தேசிய இலட்சியங்களை முழங்கியதால் பள்ளியில் இருந்து விலக வேண்டிய சூழல் ஏற்பட்டது. கல்வியா? நாட்டுப் பணியா? என்னும் வினாவெழுந்த பொழுது, 'நாட்டுப் பணியே' என்பதைத் தேர்ந்தெடுத்தார் தேசபக்த இளைஞரான வரதராஜுலு. இளம் வயதிலேயே சமய உணர்வு மிக்கவராய் விளங்கினார்.

196146

இளம் வயதில் அவருக்குக் கிடைத்த நற்பேறுகளில் ஒன்று, ருக்மணி அம்மையார் அவருக்கு மனைவியாக வாய்த்தது. இருபத்து நான்காம் வயதில் திருமணம் நடந்தது. இளைஞரின் பொது வாழ்க்கை இலட்சியங்களுக்கு ஊக்கமளித்தார் இளவயது மங்கையான ருக்மணி அவர்கள்.

நாட்டுப் பிணி தீர்க்க முனைந்த வரதராஜுலுக்கு, மக்கள் நோய் தீர்க்கும் பணியில் ஆர்வம் மலர்ந்தது. கல்கத்தா தேசிய கல்லூரியில் இரண்டாண்டுகள் இந்திய மருத்துவத்தை - சித்த வைத்தியத்தை - கற்றுத் தேர்ந்தார். பர்மா மருத்துவக் கல்வித் துறையில் சேர்ந்து மேலும் தமது மருத்துவத் தகுதியை வளப்படுத்திக் கொண்டார். திருப்பூரை இருப்பிடமாகக் கொண்டு மருத்துவத் தொழிலில் ஈடுபட்டார். டாக்டர் வரதராஜுலு நாயுடு என்னும் புகழ் பரவியது. ஆயுர்வேத மருத்துவம் திருப்பூரில் சேலம் பி.வி.நரசிம்மய்யரால் திறந்து வைக்கப்பட்டது. ஓராண்டு வருமானம் 24,000 ரூபாய்க்குக் கிட்டியது. ஆண்டொன்றுக்கு மூவாயிரம் ரூபாய் வருமானவரிகட்டும் அளவிற்குப்பணம் குவிந்தது. சேலத்திலும் இவருடைய மருத்துவப் பணி தொடர்ந்தது.

அரசியல் பிரவேசம்

டாக்டர் வரதராஜுலு நாயுடு, தமது அரசியல் பிரவேசத்தைப் பற்றி 1936 இல் அவருடைய 'தமிழ் நாடு' இதழின் தலையங்கத்தில் (செப்டம்பர் 26) கூறியதாவது:

''1906-ம் ஆண்டில் எனது 19 வயதில் இந்திய தேசிய இயக்கத்தில் நான் ஈடுபட்டேன். 1908-ம் வருஷம் புதுச்சேரிக்குச் சென்று, தேசிய தமிழ்க்கவி சுப்பிரமணிய பாரதியாரின் ஆசீர்வாதத்தைப் பெற்றேன்''.

1916-இல் தேசிய அரசியலில் தீவிரமாகப் பங்கேற்றார் டாக்டர் நாயுடு. இதனால் மருத்துவப் பணியைக் கைவிட நேர்ந்தது.

டாக்டர் நாயுடு தமிழக மெங்கும் சுற்றுப் பயணம் செய்தார். அவருக்கேயுரிய துணிவும் வன்மையும் மிக்க சொற்பொழிவுகள் மேடைப் பேச்சு வரலாற்றில்

ஒரு திருப்பத்தைத் தந்தன; கேட்டோர் கவரப்பட்டனர். கிராம மக்களுக்கும் அரசியல் தெளிவு ஏற்பட்டது.

முதல் சிறைவாசம்

இந்திய சுதந்திரப் போரில் தொழிலாளர் இயக்கம் கலந்து கொள்ள வேண்டும் என்னும் கொள்கையுடையோர்களில் டாக்டர் நாயுடுவும் ஒருவர். தமிழக அரசியல் வானில் திடீரென்று மிகுந்த ஒளிப் பாய்ச்சலுடன் உயர்வெய்த 1918-இல் மதுரையில், ஹார்வி மில்லில் நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தம் டாக்டர் நாயுடு அவர்களுக்கு உதவியது. மதுரையைச்சுற்றிப் பத்து மைல் வரையில் பொதுக்கூட்டம் போட்டுப் பேச அரசாங்கம் தடை செய்திருந்தது. இந்தச் சூழலில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முதலில் தொடங்கியவர்கள் செயலற்றுப் போனார்கள். டாக்டர் நாயுடு களம் புகுந்து கனல் தெறிக்கும் பேச்சுகள் மூலம் வேலை நிறுத்தம் ஊக்கமும்-வலிமையும் பெறப் பாடுபட்டார். தமது பிரபஞ்சமித்திரன் இதழ்களிலும் காரசாரமாக எழுதினார். தொழிலாளர் ஊதியத்தில் சற்று உயர்வு கிடைத்தது. டாக்டர் நாயுடுவின் செல்வாக்கு ஓங்கி வளர்வதை விட்டு வைக்கக் கூடாது என அரசாங்கம் முடிவு செய்தது. அவர் சொற்பொழிவில் அரசு நிந்தனைக்குரிய குற்றம் இருப்பதாகக் கூறி இந்தியக் குற்றவியல் சட்டம் 124-ஏ, 153-ஏ பிரிவுகளின் கீழ் டாக்டர் நாயுடு மீது வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை, தேசிய இயக்கப் பிரச்சாரத்தின் வலிமைக்குப் பயன்படுத்தியது, காங்கிரஸ் மகாசபை, வழக்கிற்காக நிதியுதவி திரட்டப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. இத்தகைய கூட்டங்களில் 'வீர முரசு' சுப்பிரமணிய சிவா கலந்து கொண்டார்.

மதுரையில் சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற இராணுவம் இருக்க வேண்டிய அளவிற்கு மக்கள் கட்டு மீறியது. கூட்டங்கள் நாள்தோறும் நடைபெற்றன. நீதிமன்றத்தில் பீரங்கி நிறுத்தப்பட்டது. மக்கள் கலகங்கள் நிகழ்ந்தன. துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்ந்தன. 20 வயது சௌராஷ்ட்ர இளைஞரான நீலமேகம் சுப்பையாவும் மற்றொருவரும் துப்பாக்கிச் சூட்டால் வீர மரணம் எய்தினார்கள்.

டாக்டர் நாயுடுவின் சார்பில் சேலம் சி. இராஜ கோபாலாச்சாரி வாதாடினார். இவருக்குத் துணையாக, சேலம் ஆதி நாராயண செட்டியார், மதுரை ஜார்ஜ் ஜோசப், எம்.கே.சுந்தரராச ஐயங்கார், ஆர்.எஸ்.வரத ராசுலு நாயுடு ஆகிய வழக்கறிஞர்கள் உதவினர்.

செப்டம்பர் 27, 1918இல் தொடங்கிய இந்த வழக்கு ஜனவரி 1919 வரையில் நடைபெற்றது. விசாரணை விவரங்கள் மிக விரிவாகப் பத்திரிகைகளில் வெளியிடப் பெற்றன. அகில இந்திய ரீதியிலும் இந்த வழக்கு கவனத்தை ஈர்த்தது. ராஜாஜியின் வாதத்திறமை வழக்கின் சிறப்பம்சமாகப் புகழ்பெற்றது. ஆயினும், டாக்டர் நாயுடுவிற்குப் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

மதுரையில் சிறைத்தண்டனையை எதிர்த்து ஜனவரி 14-இல் சுதேசமித்திரன் ஆசிரியர் ஏ.அரங்கசாமி அய்யங்கார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாவலர் எஸ்.சத்தியமூர்த்தி, டி.வி. வெங்கடராமய்யர் முதலானோர் பேசினர்.

திருச்சிராப்பள்ளியில் டாக்டர் நாயுடுவின் அஞ்சா நெஞ்சத்தை வாழ்த்தி, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் திரு.வி.கலியாணசுந்தரனார் பேசினார்.

தமிழகத் தேசிய இதழ்கள் டாக்டர் நாயுடுவிற்கு விதிக்கப்பட்டதண்டனையை எதிர்த்துத்தலையங்கங்கள் எழுதின. மகாராஷ்ட்ராவில் திலகர் தமது 'கேசரி' என்னும் மராட்டிய இதழில் ''பேச்சுரிமை களப்பலியாகிவிட்டது; தேச பக்த சாதி டாக்டர் நாயுடுவிற்கு வீர வணக்கம் செலுத்துகிறது'' என்று எழுதியது. டாக்டர் நாயுடுவின் செல்வாக்கு தமிழகத்தைத் தாண்டியும் புகழ் பெற்றது.

தண்டனையை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. சென்னையில் ராஜாஜியுடன், கே.சீனிவாச ஐயங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோர் வாதாடினர். ராஜாஜி எழுப்பிய ஒரு சட்ட நுணுக்க வாதம் வென்றது. டாக்டர் நாயுடு விடுதலை பெற்றார்.

காந்தி சகாப்தத்தில்...

காந்தி சகாப்தத்தில் மக்கள் இயக்கத் தேவைகள், பண்புகளுக்கேற்ற புதிய தலைமை மாநிலங்களில் தோன்றியது. காந்தியடிகளின் 'மெய்ஞ்ஞானத்துணிவு'களாக அகிம்சையும், ஒத்துழையாமையும் காலத் தேவைக்கேற்ற அறப்போர் முறைகளாக மலர்ந்தன. சிறை செல்லத் துணிவோர் முன்னணியில் நின்றனர். தமிழ் நாடு காங்கிரஸ் இயக்கத்திற்குக் கிடைத்த புதிய தலைமையைப் பற்றித் திரு.வி.க. குறிப்பிட்டதை நினைவு கூர்வோம்.

''பால், பால், லால், என்று பாரத நாடு முழங்கிய காலமுண்டு. நாயக்கர், நாயுடு, முதலியார் என்று தமிழ் நாடு முழங்கிய காலமுண்டு''. இங்கு, விபின் சந்திரபால், பால கங்காதர திலகர், லாலா லஜ்பத் ராய் ஆகியோரைப் போன்று, ஈ.வே.ராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் ஆகியோர் செல்வாக்குப் பெற்றிருப்பதைத் திரு.வி.க. சுட்டிக் காட்டுகின்றார்.

காந்தி சகாப்தம் தோன்றியதை வரவேற்று வாழ்த்திய மகாகவி பாரதியார் அமரராகிவிட்டார். அப்போது தமிழகத்தில் மேற்கண்ட மூவருடன் முன்னணியில் இருந்த அரசியல் தலைவர்கள் வருமாறு: இராஜகோபாலாச்சாரி, எஸ்.சத்தியமூர்த்தி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம், கஸ்தூரி ரங்க ஐயங்கார், கே.சீனிவாச ஐயங்கார், சேலம். விஜயராகவாசாரியார், சிங்காரவேலு செட்டியார் யாகூப்ஹாசன்.

'நீதிக்கட்சி' எதிர்ப்பில்

காந்தி சகாப்தத்தில்,காங்கிரசுக்கு எதிராக 1916இல் தோன்றிய 'ஜஸ்டிஸ் கட்சி' (நீதிக் கட்சி) தீவிரமாக இயங்கியது. இதை எதிர்த்து, தேசியத்தை வலிமை பெறச் செய்வதில் டாக்டர் நாயுடு முன்னணியில் நின்றதை, திரு.வி.க. அவர்கள் பின்வருமாறு விளக்கினார்:

'ஜஸ்டீஸ்' கட்சி முளைவிட்ட போது அதைக் கிள்ளி எறிவதற்கென்று புறப்பட்டவர் டாக்டர் வரதராஜுலு. வரதராஜுலுவின் பிரசாரம் தமிழ்நாட்டில் நாலாப்பக்க

மும பரவாவிடின், 'ஜஸ்டிஸ்' கொடி நாடு முழுவதும் பரவிக் காங்கிரஸ் உணர்ச்சிக்குக் கேடு சூழ்ந்திருக்கும். தென்னாட்டில் காங்கிரஸ் பக்தியை வளர்த்த பெருமை நாயுடுவுக்கு உண்டு''.

சென்னை மாகாணச் சங்கத்தில்

'பிராமணரல்லாதார் உணர்ச்சி' யை மூலதனமாகக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சியை எதிர்ப்பதற்கென்று ''சென்னை மாகாணச் சங்கம்'' 1917இல் தோன்றியது. காங்கிரஸ் நோக்கத்திற்கு முரண்படாத வகையில் தென்னாட்டுப் பிராமணரல்லாதவர் நலன்களுக்காக உழைப்பது என்பது இச்சங்கத்தின் கொள்கை. இந்தச் சங்கத்திற்கு திவான் பகதூர் குத்தி கேசவம் பிள்ளை தலைவராகவும், லாட் கோவிந்த தாஸ், சல்லா குருசாமி செட்டியார், ஈ.வே.ராமசாமி நாயக்கர், நாகை பக்கிரிசாமி பிள்ளை, சீர்காழி சிதம்பரநாத முதலியார், தஞ்சை ஸ்ரீநிவாச பிள்ளை, ஜார்ஜ் ஜோஸப் முதலியோர் உதவித் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமைச்சர்களாக தி.வி.கோபாலசாமி முதலியாரும், குருசாமி நாயுடுவும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவும், சக்கரைச் செட்டியாரும், திரு.வி.க.வும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

''சென்னை மாகாணச் சங்கக் கொள்கை தென்னாடு முழுவதும் பரவ டாக்டர் வரதராஜுலுவால் பிரசாரம் செய்யப்பட்டது''. இவ்வாறு திரு.வி.க. தமது ''வாழ்க்கைக் குறிப்பு''களில் எழுதியுள்ளார்.

காந்தியடிகளுடன் சந்திப்பு

1920 ஆகஸ்ட்டில் காந்தியடிகள் திருப்பூர் வந்த பொழுது டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் வீட்டில் தங்கினார். மீண்டும் 1921 செப்டம்பரில் காந்தியடிகள் சேலம் வந்த பொழுதும் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் இல்லத்தில் தங்கினார். அப்பொழுது நடைபெற்ற மகளிர் கூட்டமொன்றில் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் மனைவியார் தாம் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் காந்தியடிகளிடம் கொடுத்துவிட்டார்.

இரண்டாம் சிறைவாசம்

டாக்டர் நாயுடு சேலத்தில் வாரப் பதிப்பாகத் தொடங்கிய 'தமிழ்நாடு' இதழ் காங்கிரஸ் இயக்கப் பிரசாரத்தில் வீரமுரசாக ஒலித்தது. காந்தியடிகளின் அகிம்சா நெறியைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருந்தாலும், டாக்டர் நாயுடு அவ்வப்பொழுது ஆயுதமேந்திப் போராடவும் வேண்டும் என்னும் கருத்தை வெளியிட்டதுண்டு. இத்தகைய அவருடைய கட்டுரைகள் 'தமிழ்நாடு' இதழில் வெளிவந்தன. 12.6.1921இல் வெளிவந்த 'சுதந்திரப் போராட்டம்' என்னும் கட்டுரையும், 3.9.1921இல் வெளிவந்த 'இந்தியா சுதந்திரம் பெற ஆயுதமேந்த வேண்டும்' என்னும் கட்டுரையும் அரசாங்கத்தாரால் ராஜத்துரோக வழக்கிற்கான கட்டுரைகளாகக் கருதப் பெற்றன. சேலம் மாவட்ட நீதி மன்றத்தில் நடந்த விசாரணையில் டாக்டர் நாயுடுவிற்கு 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்றது.

வரி கட்ட மறுப்பு

1922இல் காந்தியடிகள் சிறைப்பட்டபொழுது, அதை எதிர்க்கும் முறையில் ஒரு புது வழியைக் கடைப்பிடித்தார் டாக்டர் நாயுடு. அரசாங்கத்திற்குரிய வருமானவரியைக் கட்ட மறுத்தார். காந்தியடிகள் விடுதலை பெற்ற பிறகுதான் வரி கட்ட முடியும் என்றும் அறிவித்துவிட்டார். இத்தகைய வரி மறுப்பு எவரும் கையாளாதது. வரி கட்ட மறுத்ததால் அவருடைய மோட்டார்க் காரையும் நிலத்தையும் அரசாங்கம் ஜப்தி செய்ய உத்தரவிட்டது. அவைகளை ஏலத்தில் எடுக்க எவரும் முன்வரவில்லை. இறுதியில் அரசாங்கத்தாரால் தூண்டப்பட்ட சிலர் ஏலம் எடுத்தனர். மோட்டார் காரை எடுத்துச் செல்ல ஓட்டுநர் எவரும் கிடைக்காததால் உயர்தர போலீஸ் அதிகாரியே ஓட்ட வேண்டியதாயிற்று. வரி மறுப்பைக் குறிப்பிட்டு டாக்டர் நாயுடு அரசாங்கத்திற்கு எழுதிய கடிதம், காந்தியடிகளின் ''யங் இந்தியாவில்'' வெளிவந்தது. திலகரின் 'மராட்டா' இதழும் பாராட்டியது.

டாக்டர் நாயுடுவின் ஒப்பற்ற இந்த அரிய வீரச் செயல் தேசபந்து சி.ஆர். தாஸ் அவர்களின் தமிழகச் சுற்றுப் பயணத்தின்பொழுது பாராட்டப் பெற்றது.

கும்பகோணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சி.ஆர். தாஸ் டாக்டர் நாயுடுவின் வரி மறுப்பு, ஒத்துழையாமையின் முழு வடிவம் என்று வருணித்தார்.

கான்னாட் கோமகன் பகிஷ்காரத்தில்

1921இல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் புதிய அரசியல் சீர்த்திருத்தமான 'இரட்டையாட்சி முறை' யை நடைமுறைப்படுத்தியது. இதைத் தொடங்கி வைக்க பிரிட்டிஷ் ராஜ குடும்பத்தைச் சார்ந்த கான்னாட் கோமகன் சென்னை வழியே இந்தியா வந்தார். இவர் வருகையை எதிர்த்து நாக்பூர் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. இத்தீர்மானத்தின் வழி, சென்னையில் டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க. இருவரும் ராஜாஜிக்குப் பக்கத் துணையாக நின்றனர்.

வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரம்

ஒத்துழையாமை இயக்கத்தை முறியடிக்க வேல்ஸ் இளவரசரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பயன்படுத்த விரும்பியது. 1921இல் பம்பாயில் கூடிய காங்கிரஸ் செயற்குழு வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரத்திற்கு அழைப்பு விடுத்தது.

சென்னையில் நடைபெற்ற அர்த்தாலும், ஊர்வலமும் வெற்றிகரமாக நடைபெற டாக்டர் நாயுடுவும் பாடுபட்டார். திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு.வி.க.வுடனும் வ.வே.சு.ஐயருடனும் சேர்ந்து டாக்டர் நாயுடுவும் பேசினார்.

காந்தியுகத்தில் 'தென்னாட்டுத் திலகர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார் டாக்டர் நாயுடு.

மூன்றாம் சிறைவாசம்

1923இல் பெரியகுளம் தாலுக்கா மாநாட்டில் டாக்டர் நாயுடு தலைமை வகித்த பொழுது, மதுரை மாவட்ட உசிலம்பட்டி சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட்டு போட்ட தடை உத்தரவை மீறியதற்காக, ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்று, சிறையில் அடைக்கப்பட்டார்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் பெற்றோர்
பெருமாள் நாயுடு—குப்பம்மாள்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் அவர்தம் துணைவியார்
ருக்குமணி அம்மையாரும்

தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், திரு கே. எம். பணிக்கர் ஆகியோருடன் டாக்டர் வரதராஜுலு நாயுடு.



செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., பெருந்தலைவர் காமராஜர் ஆகியோருடன் டாக்டர் வரதராஜுலு நாயுடு.

காங்கிரசில் பொறுப்புகள்

காந்தியடிகள் 1924இல் பெல்காம் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டதும், காங்கிரசில் மாறுதலை விரும்பாதார் சார்பில் தாம் செயற்குழு உறுப்பினராக இருப்பதால், மாறுதலை விரும்புவோர் சார்பில் டாக்டர் வரதராஜுலு நாயுடுவை காங்கிரஸ் செயற்குழுவில் உறுப்பினராக்கினார்.

1925இல் தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தவிர மாநில, மாவட்ட, தாலுக்கா மாநாடுகள் பலவற்றில் தலைமை வகித்திருக்கிறார்.

சுயராஜ்யக் கட்சியைப் பற்றி

காங்கிரசில் சட்ட சபை பிரவேசத்தை ஆதரித்தோர் மாறுதலை விரும்புவோர் எனப் பெயர் பெற்றனர். இவர்களுக்கு மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ் முதலானோர் தலைவர்கள். தமிழகத்தில் தீரர் சத்தியமூர்த்தி, எஸ்.சீனிவாசய்யங்கார், சுப்பிரமணிய சிவம், 1923இல் உருவான சுயராஜ்யக் கட்சியினர் ஆவர். சுயராஜ்யக் கட்சியினரை எதிர்க்கக்கூடாது என்னும் நிலைப்பாட்டை எடுத்தார் டாக்டர் நாயுடு. இதற்காக மத்திய, மாநில சமாதானக் கமிட்டியில் டாக்டர் நாயுடு ஓர் உறுப்பினராக இருந்தார். இதைப் பற்றியும், டாக்டர் நாயுடுவின் வரி மறுப்பையும் இணைத்து, திலகரின் 'மராட்டா' என்னும் ஆங்கில வார இதழ் எழுதியது.

'மராட்டா' எழுதியதாவது

''இரு விதங்களில் டாக்டர் வரதராஜுலு நாயுடு அரசாங்கத்திற்குத் தொந்தரவாயிருந்து வருகிறார். ஒத்துழையாதார்களென்று சொல்லிக் கொள்வோர்களில் இவர் ஒருவர்தான் உண்மையாக ஒத்துழையாமையை அனுஷ்டித்து வருகிறார். இவரைப் போல் எவரும் அரசாங்கத்தாருக்கு வரி கொடுக்க மறுக்கவில்லை. இரண்டாவதாக, சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைப் பிரவேசத்திற்காகப் பிரசாரம் செய்து வருவதை எதிர்த்துப் பிரசாரம் செய்யலாகாதென்று கூறும் மத்தியக் கட்சியில் முக்கிய ஸ்தானத்தை வகித்து வருகிறார். இவ்விருவகை

களிலும் இவர் அரசாங்கத்தாருக்குப் பெரும் தொந்தர வாயிருந்து வருகிறார்''.

சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில்

பிரிட்டிஷ் இந்தியாவில் இந்திய நிருவாகச் சீர் திருத்தம் காண வேண்டி பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் ஸர்.ஜான் சைமன் என்பவர் - பிரிட்டிஷ் லிபரல் கட்சி உறுப்பினர்-தலைமையில் ஒரு கமிஷன் 1927இல் அமைக் கப்பட்டது. சென்னையில் 1927 டிசம்பர் 26இல் கூடிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில், பின்வரும் எதிர்ப் புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ''இந்தியாவின் சுய நிர்ணய சுதந்தரத்தை முற்றிலும் அலட்சியம் செய்துவிட்டு, அரசியல் விசாரணைக் கமிஷனை நியமித் திருப்பதால், ஒவ்வொரு விதத்திலும் கமிஷனைப் பகிஷ் கரிப்பது ஒன்றுதான் சுயமரியாதைக் கேற்ற வழியாகும் என்று காங்கிரஸ் தீர்மானிக்கிறது''.

காங்கிரஸின் கட்டளையை ஏற்று டாக்டர் நாயுடு சைமன் கமிஷன் எதிர்ப்புப் பிரசாரக் கூட்டத்தில் ஆவே சமாகப் பேசி எதிர்ப்பு வெற்றிபெறப் பாடுபட்டார்.

இடது சாரி தேசியவாதி

காங்கிரசில் வலதுசாரிகளும், இடதுசாரிகளும் இருந் தனர். டாக்டர் நாயுடு முற்போக்குக் கொள்கையில் ஈடுபட்ட இடது சாரி தேசியவாதியாகத் திகழ்ந்தார். பண்டிட் நேருஜி காங்கிரசில் இடதுசாரி தேசியம் வளரப் பாடுபட்டவர் என்பதும் நினைவிற்குரியது. சோவியத் ருஷ்யாவில் மாமேதை லெனின் வழி நடத்திய மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி 1917இல் வெற்றிகர மாக நிகழ்ந்ததும் இந்திய தேசிய அரசியலில் இடது சாரி தேசியம் ஊக்கம் பெற்றது. டாக்டர் நாயுடு அவர்கள் 1918இல் 'நியூ இந்தியா' என்னும் அன்னி பெசண்ட்டின் ஆங்கில நாளேட்டிற்கு எழுதிய கடிதத்தில் சோவியத் ரஷ்யாவின் புதிய முயற்சிகளைப் பின்வருமாறு பாராட் டினார்:

''ஒவ்வொரு நாடும் அது விரும்பும் அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டில் உண்மையான நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு உருப்படியான சான்றைப் போல்ஷிவிக்குகள்தான்

இதுவரை தந்துள்ளனர். அடிப்படையான ந்யாயக் கோட்பாடுகளின் அடித்தளத்தின் மீதான ஒரு சர்வ தேச தார்மீக ஒழுக்கத்தைப் போல்ஷிவிக்குகள்தான் நிலைநாட்ட முயன்றுள்ளனர். ஏகாதிபத்திய இங்கிலாந்தோ, போல்ஷிவிக்குகள் போதனை செய்து நடைமுறையில் அனுஷ்டிக்கின்ற 3 கொள்கையை மறுக்க முடியாது. ஏனெனில் அவ்வாறு மதித்தால் அது, அதனுடைய (ஏகாதிபத்தியத்தினுடைய) சுபீட்சத்தையே (நன்மையையே) பாதிக்கக் கூடியது''.

சுதந்திர இந்தியாவில்

*1951*இல் சென்னை மாநிலச் சட்ட மன்றத்தில் மேலவை உறுப்பினராகச் சேலத்தில் இருந்து காங்கிரஸ் சார்பாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*1952*இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சேலம் நகரத்தில் போட்டியிட்டு, கம்யூனிஸ்ட் வேட்பாளரான மோகன் குமாரமங்கலத்தைத் தோற்கடித்தார். சட்டமன்ற உறுப்பினரானார்.

சட்டமன்றங்களில் அவர் ஆற்றிய உரைகள் கட்சி நலன்களைவிட, பொதுமக்கள் நலன்களையே பெரிதும் பிரதிபலித்தன.

தொழிலாளர் இயக்கத்தில்

டாக்டர் நாயுடு தொழிலாளர் உரிமைகளைத் தீவிரமாக ஆதரிப்பவர். *1917*இல் நாகப்பட்டினத்தில் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கம் அமைக்கப் பெற்றதில் டாக்டர் நாயுடுவிற்கும் பங்குண்டு.

சென்னை மாகாணத் தொழிலாளர் இரண்டாவது மாநாடு *16.2.1924*இல் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் தலைமையில் கூடியது. இந்த மாநாட்டில் திரு.வி.க., கே.எம்.பணிக்கர், வி.சக்கரை செட்டியார், எஸ்.சுப்பிரமணிய ஐயர், தண்டபாணி பிள்ளை ஆகியோர் பேசினர். டாக்டர் நாயுடு தமது தலைமையுரையில் உலகத்தில் முதன் முறையாக அமைந்த தொழிலாளர் அரசை - சோஷலிச அரசை - அமைத்த புரட்சித் தலைவர் லெனினை, காந்தி பக்தியுடன், பின்வருமாறு பாராட்டினார்:

191x146

''ஒரு பெரிய மகானும், மகாத்மாவிற்கு அடுத்த படியாக உள்ளவருமான ஒருவர் சில தினங்களுக்கு முன் உலகத்திலிருந்து பிரிந்து போய்விட்டார். அவர்தான் லெனின். தனது வாழ்நாட்களை ஏழைகளின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணம் செய்தார். மக்களுக்காக மரண மேற்படும் வரையிலும் உழைத்துக் கொண்டிருந்தார். ருஷ்யாவில் தனது லட்சியத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்தவுடன் அவரைக் கேவலமாக நினைக்கும்படி உலகத்திலுள்ள முதலாளிகள் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். ஆனால் உலகம் முதலாளிகளின் ஆட்சியிலிருந்து விடுபட்டு, ஜனங்களின் ஆட்சிக்கு உட்படும்பொழுது அவருடைய யோக்கியதையும், உலகத்தை ரட்சிக்கப் பாடுபட்ட உத்தமர்களுள் இவர் ஒருவரென்பதையும் உலகம் அறிந்து கொள்ளும்''.

மேலேயுள்ள தலைமையுரையில் ''உலகம் முதலாளிகளின் ஆட்சியிலிருந்து விடுபட்டு'' என்னும் கருத்து கவனிக்கத் தக்கது.

1926இல் அகில இந்திய தொழிலாளர் யூனியன் காங்கிரசின் உறுப்பினராகவும் டாக்டர் நாயுடு தொண்டாற்றினார்.

''நிலத்தைத் தேசியமயமாக்க வேண்டும்'' என்னும் புரட்சிகர முழக்கத்தை டாக்டர் நாயுடு, 1930இல் கூனூரில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டில் எழுப்பினார்.

சமூகச் சீர்திருத்தங்கள்

அரசியலில் ஈடுபடுவதற்கு முன்பேயே டாக்டர் நாயுடு சமூகச் சீர்திருத்தத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்றினார். திருப்பூரில் வைத்தியத் தொழில் செய்து கொண்டிருந்தே சுற்றுப்பயணங்கள் செய்து மேல் ஜாதியார் எனப்படுவோரை, தீண்டாமையைக்குறித்து வெட்கி வருந்தும்படித் தூண்டி எழுப்பினார். வாய்ப்பேச்சு வீரராக இல்லாமல், செயல் வீரராகவும் திகழ்ந்தார். ஹரிஜன மக்களுடன் கலந்து பழகினார். தமது வீட்டிலேயே ஒரு ஹரிஜன வகுப்பு சமையல்காரரை வேலைக்கு வைத்துக் கொண்டார்.

28.11.1926ல் நடந்த மூன்றாவது ஆந்திர சமூக மாநாட்டில் ஆற்றிய தலைமையுரையில் தீண்டாமையை ஒழிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி வலியுறுத்தினார். 1941இல் கூனூரில் கிருஷ்ணன் கோயிலில் பிராமண குருக்களை நியமித்து ஹரிஜன ஆலயப் பிரவேசத்தையும் நிகழ்த்திக் காட்டினார்.

1924இல் 'வீர விளக்கு' வ.வே.சு.ஐயர் சேரமாதேவியில் தொடங்கிய குருகுலத்தில் பிராமணச் சிறுவர்கள் தனியாகவும், பிறர் தனியாகவும் உணவருந்தச் செய்த ஏற்பாட்டைச் சூறாவளியாகத் தாக்கி, தமிழகத் தேசிய அரசியலையே ஒரு உகுலுக்கு உகுலுக்கினார் டாக்டர் நாயுடு.

''பிராமணர் - பிராமணரல்லாதார்'' என்னும் பூசலில் டாக்டர் நாயுடுவின் நிலைப்பாட்டை விமரிசிக்கும் பொழுது அவர் வகுப்புவாதியல்லர் என்பது தெரியும். இதை ஆழ நினைந்து, ''தேசிய சங்கநாத''த்தில், டாக்டர் நாயுடுவின் நெருங்கிய தோழராக விளங்கிய வ.உ.சி. கூறியுள்ள பின் வரும் கருத்து நினைவுகூரத் தக்கது.

''ஒவ்வொரு தனிவகுப்பும் தனது நியாயமான உரிமைகளையடைவதற்கு எந்தத் தடையுமிருக்கக் கூடாதென்பதை டாக்டர் நாயுடு ஒப்புக் கொள்ளுபவர். ஆனால் அதற்காக வகுப்பு வாதம் செய்வதை அவர் ஆதரிக்கவில்லை. தேசியந்தான் எல்லா நோய்களுக்கும் சிகிச்சை என்பதை அவர் தீவிரமாக எடுத்துரைத்து வந்திருக்கிறார். தென்னிந்தியாவில், பிராமண - பிராமணரல்லாதார் தகராறு தீவிரமாக இருந்த காலத்திலும் அவர் அந்த வகுப்பு வாதங்களில் கலந்து கொள்ளாமல் தேசியவாதியாகவே இருந்திருக்கிறார்''.

மிக அருமையான கணிப்பு இது. குறிப்பாக வகுப்பு வாதம், தேசியத்தை வேரறுக்க அனுமதிக்கக் கூடாது என்பதைப் புரிந்து கொள்ள மேற்காணும் குறிப்பு துணை நிற்கின்றது.

இதழியல் துறையில்

டாக்டர் நாயுடுவின் அரசியல் பிரவேசம் 'பிரபஞ்ச மித்திரன்' என்னும் வார இதழின் மூலமாக நிகழ்ந்தது. மங்கலம் ஷண்முக முதலியார் உரிமையாளராகவும்,

சுப்பிரமணிய சிவா ஆசிரியராகவும் இருந்த 'பிரபஞ்ச மித்திரன்' மிகுந்த பொருள் இழப்பில் நடந்து கொண்டிருந்த பொழுதும், 1916ஆம் ஆண்டு இறுதியில் டாக்டர் நாயுடு பிரபஞ்சமித்திரனை வாங்கினார்; அவரே ஆசிரியர் ஆனார். இரண்டாண்டுகள் பிரபஞ்ச மித்திரன் வார இதழாக வெளிவந்தது. அரசியல் பிரசாரத்திலும், சமூகச் சீர்த்திருத்தப் பிரசாரத்திலும் 'பிரபஞ்சமித்திரன்' டாக்டர் நாயுடுவிற்கே உரிய வேகத்தையும்-விவேகத்தையும் வெளிப்படுத்தியது. 1918ஆம் வருஷம் டாக்டர் நாயுடு சிறைப்பட்டபொழுது ஆயிரம் ரூபாய் ஜாமீன் கேட்டுப் பத்திரிகையை அடக்கிவிட்டது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்.

சிறை மீண்டதும், 1919ஆம் ஆண்டு இறுதியில் சேலத்தில் 'தமிழ்நாடு' என்னும் பெயரில் ஒரு வார இதழைத் தொடங்கினார் டாக்டர் நாயுடு. இந்த இதழில் எட்டாண்டுகள் பிற்காலத்தில், 'பேனா மன்னர்' என்று பெரும்புகழ் பெற்ற டி.எஸ்.சொக்கலிங்கம் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

1925இல் 'தமிழ்நாடு' வாரப் பதிப்பு சென்னையில் இருந்து வெளி வந்தது. 14.4.1926இல் ''தமிழ்நாடு'' நாளேடு தோன்றியது. வாரப் பதிப்பும், தினப் பதிப்பும் பத்திரிகைத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டன. சுதேசமித்திரனுக்கு வலுவான போட்டியாகத் 'தமிழ்நாடு' நாளேடு செல்வாக்கு பெற்றது. 1921இல் தமிழ்நாடு இதழில் வெளிவந்த ''சுதந்திரப் போராட்டம்'', ''இந்தியா விடுதலை பெற ஆயுதமேந்த வேண்டும்'' என்னும் கட்டுரைகளுக்காக ராஜத்துவேஷ வழக்கு தொடரப்பட்டது. டாக்டர் நாயுடுவிற்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

சுயராஜ்யக் கட்சித் தலைவர் சி.ஆர்.தாஸ், 'தமிழ்நாடு', 16.6.1920இல் வெளியிட்ட சிறப்பிதழிற்கு வாழ்த்துரை வழங்கியுள்ளார். தமது தமிழ்நாடு சுற்றுப் பயணத்தின் பொழுது 1923இல் சேலத்தில் 'தமிழ்நாடு' அலுவலகத்திற்கு வந்திருந்து பத்திரிகையின் நான்காம் ஆண்டின் முதல் இதழிற்கு வாழ்த்துரை வழங்கினார்.

''சுயராஜ்யம் பெற பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தை எதிர்த்து எல்லா வழிகளிலும் போராட வேண்டும். இதை ஒரு தர்ம யுத்தமாகச் செய்ய வேண்டும்''. இவ்

வாறு தேசபந்து சி.ஆர்.தாஸ் வாழ்த்தியதற்குத் 'தமிழ் நாடு' ஒரு முன்னுதாரணமாக விளங்கியது.

1936 செப்டம்பர் 26இல் வெளிவந்த தலையங்கத்தில், ''தீவிரமான சமய சமூக அரசியல் துறைகளில் கழிக்க வேண்டுமென்ற எண்ணம்'' காரணமாகத் 'தமிழ் நாடு' இதழை நிறுத்தப் போவதாக அறிவித்தார். 1936 இறுதியில் வாரப் பதிப்பும், தினப் பதிப்பும் நின்றன. நான்காண்டுகள் கழித்து மீண்டும் வாரப் பதிப்பு மட்டும் வெளிவரத் தொடங்கி,சில ஆண்டுகள் நடந்தது. ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ஆங்கில நாளேட்டையும் முதலில் தொடங்கியவர் இவரே. பிறகுதான் சதானந்தம் வழியாக, ராம்நாத் கோயங்காவிடம் சென்றது.

'தமிழ்நாடு' இதழிற்கு டாக்டர் நாயுடு தேர்ந்தெடுத்த இலச்சினை அவருடைய கொள்கையை அழுத்தமாக உணர்த்த வல்லது. மூவண்ணக் கொடியின் நடுவே கலப்பை ஏந்திய ஓர் உழவன்; மோதும் நிலையில் இரு வீரவாள்கள்; ''சுயராஜ்ய வாழ்வே, சுகவாழ்வு'' என்னும் வாசகம் - இவற்றைக் கொண்ட இலச்சினை, டாக்டர் நாயுடுவின் இலட்சியத்தை விளக்குகின்றது. அவருடைய குடும்பத்தினர் பயன்படுத்தும் கடிதத் தாளின் முகப்பிலும் இந்த இலச்சினை தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

இறுதியுரை

டாக்டர் நாயுடுவின் தேசிய வீரவாழ்வு 23.7.1957 இல் ஓய்வடைந்தது. ஆரிய சமாஜியான டாக்டர் நாயுடுவின் தகனக்கிரியை மறுநாள் மயிலாப்பூர் மயானத்தில் நடைபெற்றது. ஆரிய சமாஜப் புரோகிதர் சடங்குகளை நடத்தினார். அப்பொழுதைய முதல் அமைச்சர் பெருந்தலைவர் காமராசரும், பெரியார் ஈ.வே.ராவும் கடைசி வரை இருந்தனர்.

பெருந்தலைவர் காமராசர் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''அவருடைய வாழ்க்கையே தியாகங்கள் நிறைந்தது. மகாத்மாகாந்தி கைது செய்யப்பட்டபோது பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்காமல் வருமானவரி செலுத்தாமல் மறுத்து தென்னிந்தியாவிற்கு வழி காட்டினார். 1920 முதல் காங்கிரசுடன் தொடர்பு கொண்டு

ஸ்ரீ. ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் நானும் அரசியல் உணர்வு பெற்று, காங்கிரஸ் தொண்டு செய்வதற்குக் காரணமாயிருந்தவர் நாயுடுதான். அரை நூற்றாண்டுக் கால வாழ்க்கையில் பல மேடு பள்ளங்களைக் கண்ட அவர் வாழ்க்கை, பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாது காக்கத் தூண்டவல்லது''.

அவருடைய அருமை மனைவியார் 95 ஆண்டு வயதில் இன்று நம்மிடையே வாழ்ந்து வருகின்றார். அவருடைய ஆறு புதல்வர்களான வி.கிருஷ்ணதாஸ், வி.ராமதாஸ், வி.பாலசந்திர ஆர்யா, வி.பிரதாப சந்திரா, வி.இந்திரகுமார், வி.தயானந்தா ஆகியோரும், மூன்று புதல்விகளான லீலாவதி, சரஸ்வதி, மாயாதேவி ஆகியோரும் தந்தையார் வளர்த்த லட்சியங்களை, ஒரு புதல்வர் மறைந்தாலும் போற்றி வருகின்றவர்கள்.

தியாகிகள் நினைவு நாள் விழாக்களில் டாக்டர் நாயுடுவின் தேசிய இலட்சியங்களை மீண்டும் நினைவு கூர்வோமாக; செயற்படுத்திச் சுதந்திர பாரதத்தை உயர்த்துவோமாக.

தொகுப்பு : **பெ. சு. மணி**

194146

N88

2,000 பிரதிகள் ஆகஸ்ட் 1988. தமிழரசு அச்சகம்

தமிழ்நாடு அரசு சார்பில் 9-8-1988 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு நூற்றாண்டு விழா கொண்டாடப் பெற்றதையொட்டி வெளியிடப் பெற்றது.

வெளியீடு:

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை.
தமிழ்நாடு அரசு.